# ஆத்ம ஜோதி



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்



# ★ ஆத்ம ஜோதி ★

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்,

சோதி 12 | சார்வரி ௵ ஆடி ௴ 1-ம் ௳ (13-7-60) | சுடர் 9

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மாவைக் கந்தன் வணக்க மலர். | 257 |
| 2. | வாழ்க்கையும் வாழ்வின் பிரச்சினைகளும் | 259 |
| 3. | மாவைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம் | 263 |
| 4. | மாண்புமிக்க மாவிட்டபுரம் | 265 |
| 5. | ஸ்ரீ அபேதானந்தரின் பக்தி முரசு | 270 |
| 6. | சுத்தானந்தரின் கடிதங்கள் | 272 |
| 7. | ஆரோக்கியத்திற்குரிய அரிய நியதிகள் | 276 |
| 8. | நித்தில்ச் சுடர் | 279 |
| 9. | திருமுறைக்காட்சி | 285 |
| 10. | முர்மணிகள் | 287 |


## ஆத்ம ஜோதி சந்தா விபரம்.


ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச்சந்தா ரூ. 3-00
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. (சிலோன்)

உ

ஓம்

# மாவைக் கந்தன் வணக்க மலர்.

1 ஏழு மடந்தை கரத்திலமர்ந்
திசைத்தேன் பொழியும் இனியதமிழ்
யாழின் இதயத் தந்தியெனும்
எழில்மா விட்டம் தனில்மேவி,
நாளும் தெய்வக் கலைவளர்க்கும்
ஞானக் குமரா! நறுங்கடப்ப
மாலை புனைந்த மணிமார்பா!
வணக்கம் உன்தாள் மலரடிக்கே!

2 குதிரை முகத்தைப் போக்கி, உயர்
குளிர்மா னித முகமீந்த
மதுரக் கதையைத் தாங்கிவளர்
மாவிட் டபுரந் தனிலொளிரும்,
கதிர்வேல் முருகா! விலங்குமனம்
கனிந்து தமியேன் உய்ந்திட, என்
இதயத் தவிசில் எழுந்தருளாய்,
எளியார்க் கிரங்கும் அருள்வடிவே!

3 அகலாப் பிணிகள் பலபோக்கி,
அடைந்தார்க் கினிய சுகங்காட்டி,
நகுல முனிவர் போன்றபல
ஞானச் செல்வர் தமைவளர்த்து,
யுகங்கள் தோறும்நின் றிலங்கிவரும்
ஒப்பில் கீரி மலைத்தீர்த்தம்
உகந்தாய் வடபால், அழியாப்பே
ருயிரோ வியமாய்த் திகழ்முருகா!

ஓங்குர்எழிலார் காங்கேய!
உனது கருணைச் சிலைவடிவைத்
தாங்கிக் கரைசேர்த் தெடுத்தணைத்துத்
தாதாய்க் கொண்ட தலைவா
காங்கே யன்பா துறையதனைக்
களித்தே இடமாற் கொண்டவ! இன் (று)
ஏங்குர் எளியேன் துயர்தீராய்,
எந் தாய், களிற்றுக் கிளையவனே!

5 கண்பார்த் திடுமுன் தொலைவினிலே
காட்சி கொடுத்துக் கசிந்துருகி
அன்பர் கரங்கள் சிரமேவி,
ஆனந் தத்தேன் பருகிநிற்கத்
தெர்பாய் நிமிர்ந்து வளர்ந்தோங்கும்
திருக்கோ புரத்தாய்! சேய்நினது
பணிபார் சரண கதியடைந்தேன்:
பரம கருணை புரிந்தருளே!

6 பதிகம், கோவை, அந்தாதி,
பைங்குற வஞ்சி போன்றபல
மதுரத் தமிழ்த்தேன் மலர்மாலை
வண்ணப் புலவர் வனைந்தேத்த,
இதயக் களிகூர்ந் தேற்றருள்செய்
எழிலார் மாவைக் கதிரேசா!
பதிதன் புன்சொல், மலரடிக்கீழ்ப்
பதித்தாற் போதும், பதம் பெறுவேன்!

7 திருமால் மருகா, குருபரனே!
தெய்வப் புலவா, உமைமகனே!
புருவச் சுடராய்ப் பொலிபவனே!
புவியை மலர்த்தும் கதிரவனே!
அறுமா முகவா! குறவள்ளி
யம்மை தெய்வ யானையுடன்,
வருவாய் ஒருகால் மயிலேறி,
மைந்தன் வாழ்வு மலர்ந்திடவே

"பரமஹம்ஸ தாசன்

# வாழ்க்கையும் வாழ்வின் பிரச்சினைகளும்

(ஆசிரியர்)

ஓரறிவுயிர் முதலாக எல்லா உயிர்களும் வாழ்கின்றன. வாழ்க்கைப் பிரச்சினைகள் மற்றைய உயிர்களை விட ஆறறிவு படைத்த மனிதனுக்குத் தான் கூடுதலாக உள்ளன. மனிதனின் பகுத்தறிவு வாழ்வுப் பிரச்சினைகளை விரிவடையச் செய்துள்ளது. பகுத்தறிவு கூடியவன் வாழ்வுப் பிரச்சினைகளைக் குறைத்துக் கொண்டிருக்க வேண்டும். இன்றைய உலகில் அதற்குமாறாக அநுமார் வால் மாதிரியாகப் பிரச்சினைகள் மிக மிக நீண்டுள்ளன.

ஒவ்வொரு தேசத்து அரசாங்கமும் இப்பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது திண்டாடுகின்றன. அறிவு கூடும் அளவுக்கு மனிதனின் வாழ்வுத் தேவைகள் குறையவேண்டும். அதற்குமாறாக அறிவு கூடும் அளவுக்கு மனிதன் தேவைகளையும் கூட்டிக் கொள்ளுகின்றான். தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பணம் கூடுதலாக வேண்டியுள்ளது. பணம் சம்பாதிப்பதில் போட்டி ஏற்படுகின்றது. பொறாமை உண்டாகின்றது. சுயநலம் வளருகின்றது. சுயநலத்திற்காக எத்திய செயலைச் செய்வதிலும் மனிதன் பின்வாங்குவதில்லை.

மனிதன் தன்னுள்ளே விளங்கும் மேன்மைவாய்ந்த உண்மையை ஒரு சிறிதும் சிந்திப்பதில்லை. இன்பம் புறத்தே இருந்து வருகின்றது என ஏமாறுகின்றான். அதைத்தேடிச் சகதி முழுவதையும் விரையம் செய்கின்றான். தன்னுள் விளங்கும் உண்மையை மறந்ததனாலேயே துன்பங்களுக்கு ஆளாகின்றான். தற்காலக் கல்வியும் அகலமாகச் செல்கின்றதே தவிர ஆழ்ந்துபடிக்கும் முறை அருகி வருகின்றது. புதினப் பத்திரிகையை அகலமாகப் படித்து அன்றைக்கே அப்புதினமும் பத்திரிகையும் மறக்கப் படுகின்றன. ஏதாவது ஒரு விஷயத்தைப் பல நாள் படித்து அதனையே ஆழ்ந்து சிந்திக்கும் மனோ

பாவம் குறைந்து வருகின்றது. பாமரமக்கள் பத்திரிகைகளில் வரும் தகுதியற்ற விளம்பரங்களினாலும் புதினங்களினாலும் தாக்கப்படுகின்றார்கள். பத்திரிகைகள் வாழ்வுப்பிரச்சினைகளைக் கூட்டுதற்கு வழிவகுக்கின்றன. மக்களுக்கு இதுதேவை என்பதை அறிவுறுத்தாது மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை அறிந்து பத்திரிகைகள் வெளியிடுகின்றன. மனம்போன போக்கெல்லாம் போகப் பத்திரிகைகளே முதல் நின்று வழி காட்டுகின்றன.

வாழ்க்கையின் நிலையில்லாத தோற்றங்களிலும் செயல்களிலும் தன்னை உட்படுத்துவதால் முடிவில்லாத மூலப்பொருளைச் சிந்திப்பதில் கவனமில்லாதிருக்கின்றான் மனிதன். தற்காலத்திய பேசும்படங்களும் அவைசம்பந்தமான பத்திரிகைகளும் பெரிதும் உதவியாக இருக்கின்றன. கண்டதே காட்சி கொண்டதே கோலம்! இதுவே வாழ்க்கையின் குறிக்கோள் என சஷ்டியப்த பூர்த்தி விழாவைக்கண்டவர்கள்கூட நினைக்கும் அளவுக்கு மக்கள் மனதைப் பறிகொடுத்துள்ளார்கள். புறவாழ்வின் இணக்கத்திலும், அவ்வாழ்வில் பெறும் பேறுகளிலும் சாந்தியும் திருப்தியும் அடையவீணே முயல்கின்றனர்

மனிதன் நினைப்பதுபோல் புறவாழ்வின் இணக்கத்தினால் சாந்தி அமைதி அடைந்தவர்களுடைய சொந்த அநுபவம் ஏதாவது இன்றுவரை உண்டோ என்றால் இல்லை என்றே எவரும் கூறுவர். அங்ஙனம் எந்த நூலிலாவது எழுதப்படவில்லை. தமது சொந்த அநுபவத்தை எவரும் கூறியதும் இல்லை. இவ்வழியிற் சென்று தோல்வி கண்டோரின் உதாரணங்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. அவர்களே தமது சொந்த அநுபவத்தைக் காலமெல்லாம் வீணாக்கிவிட்டோம் என வருத்தத்துடன் கூறியிருக்கின்றார்கள்.

ஆனால் மென்மேலும் பெருகும் கவலைகள் துன்பங்களுக்கிடையே சுழலுகின்றான். தான் அநுபவிக்கும் துன்பத்தை துன்பமென்று சிந்திப்பதில்லைப்போலும். இவைதான் முடிந்த இன்பம் என முடிவு கட்டிவிடுகின்றனர். ஒரு துன்பத்தின் அநுபவம் இன்னோர் இன்பத்திற்கு வழிகாட்டவேண்டும்.

மனிதனைப்பொறுத்த அளவில் அதுபொய்யாகிவிடுகின்றது. ஒரு நெருப்பிலிருந்து இன்னொருநெருப்புக்கு—ஒரு குழியிலிருந்து இன்னொருகுழிக்கு—ஒருகவலையிலிருந்து இன்னொரு கவலைக்கு அவன் தாவுகின்றான். தானே ஆக்கிய இருளில் தடுமாறுகின்றான். தானே வெட்டிய குழியில் கண்ணைமூடிக்கொண்டு விழுகின்றான். அடி எடுத்து வைக்குந்தோறும் தவறிவிழுகின்றான். விழுந்தும் அறிவு வரவில்லை. விழும்போதெல்லாம் நானு விழுந்தேன் என்று கர்வங்கொள்ளுகின்றான். அவன் துன்பமோ அநேகம், அவனுக்கு ஓய்வும் சாந்தியும் எங்குமில்லை.

மனிதன் தன்னுள் விளங்கும் ஆனந்தமயமான தலைவனும் இறைவனை விடுத்து, அப்பால் செல்வதனால்இப்படியான தடுமாற்றம் விளைகின்வது. தடுமாற்றத்திற்குக் காரணத்தைச் சிந்திப்பதில்லை. யாராவது பெருமக்கள் எடுத்துக்காட்டினாலும் அவனது பழக்கம் ஏற்க மறுக்கின்றது. விட்டில் பூச்சிக்கு விளக்கிலுள்ள சிம்னி பலமுறை சுட்டாலும் அது அதனைப் பொருட்படுத்துவதில்லை. சுடும்போது வேதனை தாங்கமாட்டாது பறந்து செல்லும். அடுத்தகணம் அச்சுடரிலேயே விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளுகின்றது. இப்படியே தான் மனிதனும் எப்பிழையைச் செய்து துன்புற்றானே அதனையே மேலும் மேலும் செய்து துன்பத்திற்கு இரையாகின்றான்.

தலைவனை மறந்தால் துன்பம் விளைகின்றது. இதனை மனிதன் ஒப்புக்கொள்வதில்லை. பணம் இருந்தால் மகிழ்வுடன் இருக்க முடியுமா என்று கேட்டால் இதுவரை எந்தப் பணக்காரனாவது தான் மகிழ்வுடன் இருந்ததாகக் கூறியதில்லை. பெரிய பட்டம் பெற்று புகழ் அடைந்து வாழ்ந்தவர்கள் வாழ்வின் பிரச்சினைகளைத் தீர்த்ததாகவும் சரித்திரத்தில் இல்லை. அப்படியானால் வாழ்வுப் பிரச்சினை தீர்க்கமுடியாத ஒன்றா? என்ற கேள்வி எழுகின்றது. அதற்கு விடை மகான்கள் கூறியிருக்கிறார்கள். மனிதன் அதனைக் கருத்திற்கு எடுக்க மறுக்கின்றான்.

வாழ்க்கை குறுகியது. இறைவனோடியைந்து வாழ்ந்து இச் குறுகிய வாழ்வினால் பயன் அடைதி. நாட்கள் செல்லச் செல்ல உனதென நீ இறுகப்பற்றி நிற்கும் பொருள்களைத்

தையும் விடுத்து நீ போய்விடவேண்டிய உன் இறுதிக் காலமும் நெருங்கும். இது எல்லாருக்கும் நிகழப் போகின்றதொரு பேருண்மை. இதனைச் சிறிது முன்னாடியே மனிதன் சிந்திக்கின்றானில்லை. சிந்தித்து உணர்வானானால் இன்று கோட்டில் நடைபெறும் எத்தனையோ வழக்குகள் இல்லாது ஒழிந்து போயிருக்கும். இறைவன் சிந்தனையோடு வாழும் வாழ்க்கையே உண்மையான இன்பமும் சாந்தியும் வாய்ந்த வாழ்க்கை. இவையில்லையேல் வாழ்க்கை பயங்கரமான மரணத்துக்கு இழுத்துச் செல்லும் நெடிய துன்பச் சங்கிலியாகும்.

பூரணமாக மலர்ந்து இதழையும் மணத்தையும் தன் அனைத்தையும் தன்னைத் தோன்றச் செய்த தோட்டக்காரனுக்கு அளித்துவிடும் மலரைப் போல நாமும் எம்மை அன்போடும் ஆக்கியோனுக்கு எம்மைச் சமர்ப்பித்தலே எமது வாழ்வின் பிரச்சினைகளைத் தீர்த்தற்கு ஏற்றதோர் வழியாகும்.

## நீதி வாக்கியங்கள்

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

《 》 《 》 《 》 《 》 《 》 《 》

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

《 》 《 》 《 》 《 》 《 》 《 》

கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனையும், உனக்குப் போதிக்கும் அருள் வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால் அவரை ஒருகாலமும் மறவாதே.

《 》 《 》 《 》 《 》 《 》 《 》

ஈசுர பத்தியும், நல்லொழுக்கமும் உள்ள பிதாமாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

[நாவலர்]

# மாவைச் சுப்பிரமணியக் கடவுள்பதிகம்

( குமார சுவாமிக்குருக்கள் )

1. மாருதப் பிரவல்லி தன்குதிரை முகமாற
மாற்றிநன் முகமாக்கினை
மன்னன்முசு குந்தனுக் குன்றம்பிமார்களை
மன்பொருந ராக்கிவைத்தாய்
மறைமுனி மகத்தில்வரு செச்சையை யிவர்ந்து திரு
வாகன மதாக்கி வைத்தாய்
பாரினின் மலைக்குறவர் பால்வந்த வள்ளியைப்
பற்றிமனை யாக்கி வைத்தாய்
பாரிடமு ணுதபடி பாடுநற் கீரனைப்
படிமீது மீட்டு வைத்தாய்
பண்டிதர்க ளீண்டியுறை சங்கத்தி ருந்துபொருள்
பகரவும் பண்ணி வைத்தாய்
சூருடல்பி ளந்துபின் கோழிமயி லாய்வரச்
சொல்லடிமை யாக்கி வைத்தாய்
தொல்பரங் குன்றினிற் றெய்வானை யம்மையைத்
துணைமனைவி யாக்கி வைத்தாய்
துய்யதோள் வீரனுக் குருவெலாங் காட்டியே
தூயனுச் செய்து வைத்தாய்
ஈருமிரு தலைக்கொள்ளி யெறும்புபோ லலைந்திடும்
மிழிஞனுக் கருள லரிதோ
வேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளவா
யெழில் வள்ளி கணவனே பொழின் மாவை நேயனே
யீசகுரு நாத குகனே

2\. உன்னையல் லாதுபிற தெய்வத்தை நேசிக்கி
னுன்புகழ்க் கேற்றமாமோ

வொப்பிலாக்கருணை தருநாளெதுவென் றென்றுன்னி
யுன்னியென் மனமுருகுதே

யுற்றதுணை யானநீ யறியார்கள் போலொன்று
முரையாதி ருக்கலாமோ

மின்னையல் லாதுவமை யில்லாத யாக்கையின்
மேவுபல னென்னை கொல்லோ

மேனுளி னீட்டுதவ மில்லெனினு மக்குறையை

வீட்டியருள் கூட்டலரிதோ

விடையேறி யருண்மைந்த வுமைமாது பெறுகந்த
வெற்றிவே லுற்றகைய

அன்னையர்க ளிருவரையு மிச்சைகிரி யாசத்தி
யாக்கிநடு வாகிஞான

மானவடி வாகிமுது ஞானகுரு வாகிவழி
யடியார்கள் பாவினுக்கே

யாசையுற் றவர்மனப் படியெலா மாக்குவோ
யருடரக் கலியுகத்தில்

என்னையுனை யல்லாது கண்கண்ட தெய்வமிலை
யென்றந்தை யன்னைகுருவே

யேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளு வா

யெழில்வள்ளி கணவனே பொழின்மாவை நேயனே
யீசகுரு நாதகுகனே.

# மாண்புமிக்க மாவிட்டபுரம்.

(கு. பாலசுந்தரக் குருக்கள்)

வரலாறு கூறுமுன்,

''கோவிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன்—வீட்டை
வைத்து இழத்தல் போலும்''

என்று வரகவி சுப்பிரமணிய பாரதியார் கூறிய வாறு தான தருமமங்கள் யாவும் தலைதடுமாறும் காலம் இது. அம்மட்டோ! விஞ்ஞான விந்தைகள் நாளும் மலிந்த காலம். எதையும் வியாபார நோக்கம் கொண்டு கணிக்கும் காலம்! தலவரலாறு கூறின் அவ்வுண்மைகளைப் பகுத்தறிவு என்னும் கண்கொண்டு அருவித் அருவி அளவிடும் காலம் இவற்றைச் சரித்திரக் கண்கொண்டு பார்ப்போருக்கு அற்புதங்கள் தோன்றப் பெறு. அங்ஙனமே பக்திக் கண்கொண்டு பார்ப்போருக்கும் சரித்திர ஆராய்ச்சியும் வறிதே வற்றும். இந்நிலையில் எம்மாலியன்றளவு பகுத்தறிவு, சரித்திரம், பக்தி என்பவற்றின் துணை கொண்டு மாவைத் தலவரலாற்றினை எழுதுவதே எம் நோக்கம்.

ஈழத்தின் வரலாறு.

சரித்திரமறியாக் காலத்திலிருந்தே இன்றுள்ள இந்து மகா சமுத்திரத்தின் பெரும் பகுதி மேற்கே "மடகாஸ்கர்" தீவு தொடங்கிக் கிழக்கே "ஜாவா" சுமாத்ரா வரை "லெமூரியா' என்னும் கண்டமாக வியாபித்திருந்தது என்பர் ஆராய்ச்சி' யாளர். இப் பெரும் நிலப்பரப்புப் பின்னர் கடலாற் கொள்ளப் பட்டது. ஆனல் இன்று நாம் வதியும் ஈழமணித் திருநாட்டைப் பற்றியோ எவ்வித அபிப்பிராய பேதமுமில்லை. இன்றைய இலங்கைதான் இராமாயண இலங்கை என்று சரித்திர ஆராய்

சியாளர் சிலர் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். இது ஈழம், ஈழநாடு, இரத்தினத் துவீபம், சிங்களம், இலங்கை என்றும் பல்வேறு பெயர்களால் அழைக்கப் பட்டுள்ளது.

இவ்விலங்காதுவீபத்தின் சிரமாய் மிளிர்வது மணற்றி என்னும் இயற்பெயரான் அமைந்து, யாழ்ப்பாணம் என்னும் காரணப் பெயரால் விளங்கும் குடாநாட்டுப் பகுதியாகும். இப் பகுதியில் அநேக புராதனப் பெருமைவாய்ந்த சைவாலயங்கள் பக்தி வழிபாட்டு நிலையங்களாய் ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான மக்களைத் தம்பால் ஈர்த்தவண்ணமாயிருக்கின்றன.

இப்பழம் பெரும் புண்ணியப் பகுதிகளுள் ஒன்று யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து வடக்கே 10 கல் தொலைவிலுள்ள மாண்புமிக்க மாவிட்டபுரமாகும். இதன் வடபால் ஒன்றரைக் கல் தொலைவிலுள்ள காங்கேயன் துறையும், மேற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள நகுலேசுவரம் என்னும் கீரிமலையும், மாவையம் பதியுடன் நெருங்கிய வரலாற்றுத் தொடர்பு பூண்ட இருபெரும் பழம் பதிகளாம்.

## புராண வரலாறு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற மாவையம் பதியின் வரலாற்றை வரையும் பொழுது, அதனினும் வேறு வைத்தெண்ண முடியாத் தொடர்பு பூண்ட திருத் தம்பலேஸ்வரம், என்னும் கீரிமலையின் வரலாற்றையே முதற்கண் குறிக்கவேண்டும். ஸ்காந்த புராணத்தின்படி நகுலமுனிவர் தவஞ் செய்தமையினுல் நகுலேஸ்வரம் என்றும், சித்திராங்க தன் யாழ்வாசித்ததனுல் கந்தர்வபுரம் என்றும், இராவணனும் அகத்தியனும் போட்டியாக யாழ் வாசித்தமையால் 'வீணுகானபுரம்' என்றும் பெயர்கள் பெறும். மேலும் இதிகாசங்களிலே முசுகுந்தச் சக்கரவர்த்தி, நளச் சக்கரவர்த்தி அர்ச்சுனன், ஸ்ரீ ராமன் முதலியோர் தீர்த்த மாடிப்போந்தனர் என்றும் அறியப்படுகின்றது.

சரித்திர வரலாறு.

விஜயன் இலங்கையில் ஆட்சிசெய்த காலம் தொடக்கம் இலங்கையின் நான்கு திக்குகளிலும் நான்கு சிவக்ஷேத்திரங்கள் சிறப்புற்று விளங்கின. அவற்றுள் வடக்கின் கணுள்ள திருத் தம்பலேசுவரம் (கீரிமலை) மிகப் பிரசித்திபெற்றிருந்தது. விஜயனுக்குப் பின் பல்லாண்டுகளுக்குப் பின்னர் சிங்களவர் இப்பகுதிகளிற் குடியேறினர்.

மாருதப்பிரவல்லி வரலாறு

கி. பி. 795 அளவில் உக்கிரசிங்கன் ஆட்சி செய்கையில் சோழ நாட்டரசனுகிய திசையுக்ர சோழன் மகள் மாருதப்பிரவல்லி தனக்கேற்பட்ட குன்ம நோயைத் தீர்க்கவேண்டி இந்தியாவிற் பல தீர்த்தங்களிலும் நானமாடியும் நோய் நீங்கப்பெற்றிலள். அவள் நோயினுல் உடல்மெலிந்து வருந்துகையில் சாந்தலிங்கன் என்னும் துறவி அவளைக் கண்டு, "இலங்கையின் வடகரையிலே கீரிமலை என்றெரு குன்றுண்டு. அங்கு உவர்ச்சல மத்தியில் சுத்ததீர்த்தமும், மலையருவித் தீர்த்தமும் கலந்த "சாகர சங்கமத் தீர்த்தம்" இருக்கின்றது. அது பல்வகைப் பிணிகளையும் போக்கவல்லது. அங்கு போய் நீராடிச் சில பொழுது தங்கினுற் சுகமடைவாய்" என்று அறிவுறுத்தினர். அங்ஙனமே அவள் தோழியர், சேனைகளுடன் வந்து, "குமாரத்திபள்ள!" த்திற் பாளையமிட்டுக் கொண்டிருந்தாள். பின் அங்கு மலைச் சாரலில் தவஞ் செய்துகொண்டிருந்த நகுல முனிவரைத் தரிசித்துக் கீரிமலை நன்னீரூற்றில் நீராடி வரலானுள், குன்ம நோய் அவளைவிட்டகலவே, அவள் பேரெழிலுடன் திகழ்ந்தாள்.

மாவிட்டபுரப் பெயர்க் காரணம்".

அப்பொழுது குமாரத்திபள்ளத்துக்கு அணித்தாகவுள்ள "கோவிற் கடவை! என்னும் இடத்தில் சடையனுர் என்பார் முருகனின் வேலை வைத்து வழிபாடாற்றி வந்தார். ஆங்கு முருகனுக்கு ஆகமோக்தமாக ஓராலயஞ் சமைக்க ஆவல் கொண்ட எழிலரசி தன் விருப்பத்தைத் தந்தைக்கு அறிவித்தாள். சோழனும் ஆலயம் சமைப்பதற்கு வேண்டிய சகல உதவிகளையும் ஈந்தான். சோழனுல் அனுப்பப்பட்டதில்லை

மூவாயிரவருள் ஒருவரான பெரியமனத்துளார் என்னும் தீக்ஷிதர், கந்தசுவாமி, தெய்வயானை, வள்ளியம்மை என்னும் விக்கிரகங்களுடன் காயாத்துறையில் வந்திறங்கினர். காயாவுக்கு யாத்திரை செய்வோர் கப்பலேறுந்துறை என்னும் காரணத்தால் காயாத்துறை என வழங்கப்பட்டு வந்த அத் துறைமுகம், கலியுகவரதனுகிய காங்கேயன் விக்கிரகம் கொண்டுவந்து இறக்கப்பட்ட காரணத்தால் காங்கேயன் துறை என அழைக்கப்படலாயிற்று. கோவிற் கடவையும் அன்று முதல் மாவிட்டபுரம் எனக் காரணப் பெயர் பெற்றது. இதனை மஹாவட்டபுரம் என்று கூறுவாருமுளர். இது நிகழ்ந்தது சுந்தர மூர்த்தி நாயனுர் காலமாகிய 9ம் நூற்றுண்டேயாகும்.

இவ்வாலயம் 9ம் நூற்றுண்டு முதல் 16ம் நூற்றுண்டு வரை ஐந்து பிரகாரங்களோடும், அந்தணர் அக்ரகாரம் முதலிய பல்வகைச் சிறப்புக்களோடும் சீருடனும் சிறப்புடனும் பொலிவதாயிற்று. பின்னர் அந்தோ! இவ்வாலயம் புறமதத்தினரான பறங்கியரால் இடிக்கப்பட்டது. இதை முன்னரேயறிந்த தீக்ஷிதர்கள் விக்கிரகங்களைத் திருமஞ்சனக் கிணற்றுளிட்டு ஆங்காங்கு கலைந்தனர்.

**புனருத்தாரணம்.**

பின்னர் சமயசுதந்தரத்தோடு கூடிய ஆங்கில ஆட்சி ஏற்பட்டதும் கி. பி. 1785ம் ஆண்டளவில் அன்று பலராலும் நன்கு மதிக்கற்பாடுடையராகிய சபாபதி ஐயர் என்பார் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து நித்திய நைமித்திக பூசைகளை ஏற்படுத்தினுர்.

**மஹோத்ஸவம்.**

இவ்வாலயத்தில் வருடந்தோறும் சைவர்களின் புண்ணிய தினமாகிய ஆடி அமாவாசையைத் தீர்த்த தினமாகக் கொண்டு இருபத்தைந்து தினங்கள் மாவை முருகன் ஆன்மாக்களுக்குச் "சாம்பவதீக்ஷை" செய்வார். இவற்றுள் கார்த்திகை உற்சவம், மிருக யாத்திரை, பட்டுக் குடைவிழா, பஞ்சரதோற்சவம், தீர்த்தோற்சவம் என்பன விசேடமானவை. இரதோற்சவத்தன்று பஞ்சமூர்த்திகளும் ஐந்து இரதங்களிலும்

பனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இன்றைய நிலை.

இவ்வாலயம் 1785ம் ஆண்டு முதலாக, குருமார் சந்ததியினரால் பரிபாலிக்கப் பட்டு வந்தது. பின்னர் ஏறக் குறைய ஐம்பது வருடகாலமாக ஓயாது சங்கிலித் தொடர்போல ஒன்றன்பின் ஒன்றாக இவ்வாலயத்தையொட்டி நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்ததின் பெறு பேறாக, சைவப் பெருங் குடிமக்கள் விழித்தெழுந்து சரித்திரப் புகழ் வாய்ந்த இவ்வாலயத்தை "ஒரு பொதுஜன தரும ஸ்தாபனம் (Public Charit -adle Trust) என இலங்கை உயர்தர நீதிமன்றத்தினரால தீர்ப்பு அளிக்கப் பெற்றனர்.

கொண்டல் சேர் கோபுரம்.

இவ்வாலயத்துத் தனிச் சிறப்பளிப்பது அதன் மேற்குப் பிராகாரத்திலுள்ள இராஜ கோபுரம் ஒன்றேயாகும். அது இரங்கூன் பண்டாரம் என்னும் காரணப் பெயர் பூண்ட ஒரு தரும சீலரின் பொருளுதவிகொண்டு நிறுவப்பட்டது அழியுந்தன்மைத்தாய பணத்தைக் கொண்டு அழியாப் புகழ் பெற்ற அவர் கொடையே கொடை!

பாடினோர் வரலாறு.

இப்பழம்பதியில் எழுந்தருளியிருக்கும் முருகன்மீது பல புலவர்கள் பாமாலை சார்த்தியுள்ளார்கள். அவற்றுள் சில வருமாறு:-

1. முப்போதும் திருமேனி தீண்டும் பேறுபெற்ற மாவை குமார சுவாமிக் குருக்கள் பாடிய 'மாவைப் பதிகம்
2. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர்—மாவைப் பதிகம்
3. செவ்வந்தி நாத தேசிகர்: மாவை மும்மணிக் கோவை
4. பொன்னம்பலபிள்ளை -மாவையந்தாதி
5. சபாபதி நாவலர்-மாவையந்தாதி
6. மயில்வாகனப் புலவர் மாவைப் பதிகம்
7. சேனாதிராச முதலியார்-மாவிட்டபுர ஊஞ்சல்

8. விசுவநாத சாஸ்திரி-மாவைக் குறவஞ்சி

9. மயிலிட்டி, வேலுப்பிள்ளை உபாத்தியாயர்-மாவைப் பதிகம் இவையேயன்றி வித்துவ சிரோமணி சி. கணேசையர் அவர்கள் ஆறுபடை வீடுகளையும் மாவிட்டபுரத்தில் ஏற்றிப் பாடிய ஆறு பாக்கள் விசேடமாகக் குறிப்பிடப்படவேண்டியவை. ஏனைய விரிவஞ்சி விடுத்தாம்.

மாவைப்புராணம்.

முழுவதும் புராண முறையில் அமைந்ததும், 25 படலங்களையும் 1595 செய்யுள்களையும் கொண்டதும் ஆகிய மாவைப்புராணம் என்னும் நூல் அச்சுவாகனமேறவிருக்கின்றது. மாவையெம்மப்பன் திருவருள் கை கூடுவதாக.

## ஸ்ரீ அபேதானந்தரின் பக்தி ரசம்.

1. 'நான்' இருக்கும் பஜனை எல்லாம் பஜனை ஆகாது. அது வெறும் கதறல் தான். உணர்ச்சி பிரவாகத்தில் அப்பனின் நாமத்தை சரீராபிமானமின்றி தாளம் போட்டு பாடுவது தான் பஜனையாகும்.

2. முதலில் சாஸ்திரங்கள் முதலிய அனைத்தையும் கற்று ஆண்டவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ளக் கூடிய அறிவாகிய ஞானத்தைப் பெற்று, பின் கற்றவைகளையெல்லாம் மறந்து, எல்லாவற்றையும் அவனாகக் காண்பது தான் பக்தி நிலை.

3. துன்பத்தின் மத்தியில் தான் ப்ரேமை இருக்கிறது.

4. ஞான வைராக்கியமாகிய காண்டீபத்தைக் கையிலேந்தினால் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுவது நிச்சயம்.

5. சந்யாசம் என்பது காவி உடை உடுத்து கற்றை சடை வளர்ப்பது என்பதல்ல. குரங்காகிய மனதிற்கு நாம் அடிமையாகாமல் அதை நமக்கு அடிமையாக்குவதே சந்யாசமாகும்.

6. கீதா சாஸ்திரம் என்றால் பகவானுடைய நாவினின்று உதித்த வார்த்தைகள் என்று நாம் அனுபவ பூர்வமாக உணர வேண்டும்.

7. வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிபெற பிரம்மசரியமாகிய கொடியைக் கட்டிக்கொள்ள வேண்டும்.

8. சொல்லும் செயலும் ஒன்றாக இல்லாத போது நாம் அவியாகிறோம்.

9. பிரபஞ்சவாசனை சிறிது இருந்தாலும் பகவானின் சொல்லின் நாதத்தை உணரவே முடியாது.

10. எது இரகசியமோ, அதை விட்டுவிட வேண்டும், எதை பெரிதென்று எண்ணுகிறோமோ அதை சிறிது என்று எண்ண வேண்டும். அப்பொழுது தான் ஆத்ம சாக்ஷாத்காரம் அடையமுடியும்.

11. இந்த உலக விஷயங்களிலிருந்து நிவர்த்தி அடைவதற்கே பாரத யுத்தம் என்று பெயர்.

12 மற்றவர்களிடம் இருக்கும் கல்மிஷங்களைக் கரையச் செய்யக் கூடியவர்கள் தான் பிராமணர்கள்.

13. கடவுளிடம் கொடு கொடு என்று கேட்பது கடவுளே, எனக்கு எதைக் கொடுப்பது எதைக் கொடுக்கக் கூடாது என்பது உனக்குத் தெரியாது நீ, ஒரு முட்டாள், நான் உனக்கு சொல்லித் தருகிறேன் நீ அதன்படி எனக்கு இவற்றை எல்லாம் கொடுக்கவேண்டும்." என்று சொல்வது போலாகும்.

14. மக்கள் என்பவர் ஆண்டவனின் குழந்தைகள் என்று பொருள்படும். அதனை உணராதவர்கள் மாக்கள் ஆவர்.

# சுத்தானந்தரின் கடிதங்கள்.

அன்புள்ள தோழரே, பசுமலைப் படிப்பிற்கு சுபமங்களம் பாடியாயிற்று! கம்பர் நாடகம் நடத்தினோம். நான் கம்பராக நடித்தேன். எனது நடிப்புடன் கிறிஸ்துவர்களுக்கும் விளங்கும்படியாக நமது சன்மார்க்கக் கொள்கைகளையும் பேசிவிட்டேன். என் ஆர்வம் நிறைவேறியது. நண்பா, சென்ற ஒருமாதமாக ஆசிரியர் மாணவர் அனைவரும் இந்தத் திருவிழாவிற்கு பலமான ஏற்பாடுகள் செய்தோம். விழாக் குழுவில் நானும் ஒரு காரியதரிசி. நாடகம், பிரசங்கம், மேடையலங்காரம் மூன்றிலும் கருத்தூன்றினேன். நண்பர் இராமனாதன் முதலியோர் ஆசிரியருக்கும் பள்ளித்தோழருக்கும் நல்விருந்தளிக்கவும் படம் பிடிக்கவும் பொறுப்பேற்றார்கள். இந்த வாரம் நடந்த நிகழ்ச்சிகள் எனக்குப் புதியவுணர்ச்சியும் தைரியமும் தந்தன. சிலவற்றைச் சொல்லுகிறேன்.

1. நாங்கள் பாட்டுக்கச்சேரிக்கு ஏற்பாடு செய்தோம். துரை கிராமபோன் போதும் என்றார். மதுரையிலிருந்து நாங்கள் சில இசைத்தட்டுகள் கொண்டுவந்து துரையின் இசைப்பெட்டியில் வைத்துக் காட்டி ஆங்கிலத்தில் பொருள் விளக்கினோம். உள்ளத்தை அள்ளும் நம் அருட்பாடல்கள் துரைக்கு வெறும் சத்தமாகப் பட்டன. நமது ஆலாபனம் அவருக்குப் பிடிக்கவேயில்லை. முடிவில் ரூல் பிரிட்டானியா (Rule Brittania) என்ற இசைத்தட்டை வைத்தோம். துரை ஆனந்தக் கூத்தாடினார்! பாட்டு என்றால் அவரவர் தாய்மொழியில் இருந்தாலே இனிக்கும்! தமிழர் செவிக்கு தமிழ்ப்பாட்டே தகும்!

2. நமது நாட்டில் ஒரு பெரிய தொல்லை: சாப்பாட்டுத் தொல்லை. நமது மானம் அரிசிப்பானையில் வேகிறது. திருவிழாவில் விருந்து வைக்கப் பணம் சேர்ந்தது. ஆனால் மனம் சேர வேண்டும்! எல்லாரும் ஒரே கல்லூரி மாணவர்; ஒரே படிப்புப் படித்தவர்; எல்லாரும் வித்தியா சேவகர். ஆதலால் எல்லாரும்

சேர்ந்து சாப்பிடுவோம். முடிந்தால் எல்லாரும் சேர்ந்து சமைப்போம் என்று நான் வற்புறுத்தினேன். எனது பிராமண சகோதரருக்குக் கோபம் வந்துவிட்டது 'ஐயா, சமபந்தியில்லாவிட்டால் நான் உங்கள் ஏற்பாட்டில் பங்கு கொள்ள மாட்டேன் சாதிபேதத்தை வெறுக்கிறேன். ஆனல், மனிதனுக்கு உள்ள உரிமையை நீங்கள் எனக்கு மறுக்க முடியாது' என்றேன். நேற்று மாலை விருந்து நடந்தது. மதுரை பட்சணக் கடையிலிருந்து ஓமப்பொடி, காராப்பூந்தி, இலட்டு, பதிர்ப்பேணி எல்லாம் கமகமவென்று வந்தன. நாங்களே தேயிலைப்பானம் தயாரித்தோம். விருந்து மணியடித்தது. பிராமண மாணவர் ஒரு தனியறையில் அமர்ந்தனர்; மற்றவர், வேறோர் அறையில் அமர்ந்தனர். அவருள்ளும் ஒரு முதலியார், பிள்ளையுடன் உட்கார மறுத்தார். சிலர், 'கிறிஸ்துவர்களுடன் சாப்பிட முடியாது' என்று தனியாக அமர்ந்தனர். திசைக்கொரு பக்கம் வக்கரித்துக் கொண்டிருந்த இந்தக் கூட்டம், எனக்கு விநோதமாயிருந்தது. நான் எல்லாருக்கும் பட்சணம் பரிமாறியதும் எனது பங்கை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவர்களுடன் அமர்ந்து உண்டேன். "நீ ஒரு பார்ப்பானே, எங்களை மதித்தாய்" என்றனர் கிறிஸ்துவர். 'ஐயா, நான் எந்தச்சாதியுமல்லன்: எனக்குக் கடவுள் தந்தை, மனித சமுதாயம் என்சகோதரர். என் சாதி, மனித சாதிதான். நீங்களும் என் சகோதரரே' என்றேன். லார்பீர் தமது பேச்சில் நமது சாதிவேற்றுமையைப் பிய்த்துவாங்கினர். மில்லர், "மனிதனுக்கு மனிதன் பார்த்து உண்ணக்கூடாது என்ற வழக்கம் இருக்குமட்டும் உமக்கு ஒற்றுமை வராது" என்றார். நானும் சாதிமத பேதங்களை கண்டித்துப் பேச நேர்ந்தது. என்ன செய்வது?

3, இரவில் என்னை ஒரு உபதேசியார் கண்டு பேசினர். நான் கிறிஸ்துமதத்தில் சேர விரும்புவதாகச் சொல்லக் கேட்டு, அவர் என்னிடம் இந்து மதத்தைக் கண்டபடி தூஷித்துச் சிலுவை மதத்தை உயர்த்திப் பேசினர்: "இந்திய மகான்கள் ஒருவரும் எங்கள் ஏசுவைப் போல சிலுவை ஏறவில்லையே,' என்று என் முகத்தைப் பார்த்தார். 'நண்பரே, ஏசுநாதர்

சிலுவை யேறினால், மனித சமுதாயமே சிலுவை யேற வேண்டுமா? பாட்டன் தற்கொலை புரிந்துகொண்டால், பேரனும் அப்படியே செய்யவேண்டுமா? எங்கள் சமயம் இது; எங்கள் மகான்கள் பெருமை இன்னது. உங்கள் சமயம் சரியை கிரியைகளுடன் சரி; அதற்குமேல் யோகம், ஞானம், துரிய துரியாதீத அனுபவங்கள், எங்கள் வேதாகம சன்மார்க்கத்தில் உள்ளன என்று விளக்கினேன். போதகர் எனக்கு ஒரு பைபிள் தந்து "இதையாவது எப்போதும் வைத்துக்கொண்டு படியுங்கள்" என்றார். 'ஆஹா, தாங்களும் திருக்குறள் படியுங்கள்! என்றேன்.

இப்படி எத்தனையோ சம்பவங்களுக்கிடையே பசுமலைப் படிப்பு முடிந்தது. பேச்சுத்திறமைப் பரீட்சைக்கு, நான் விவேகானந்தரின் சந்யாஸ கீதங்களையே (The Songs Of The Sanyasin) உரக்க ஒப்பித்தேன். அதுதான் முடிவான பரீட்சை. அப்பாட்டை ஒப்பிக்கும்போது நானும் தைரியமான துறவியாகி சுதந்திரமாகத் திரிய வேண்டும் என்ற ஆசை கொண்டேன்! ஆம், இன்றுடன் விடுதலை!

இனி மைக்கேல் என்னைத் திருமங்கலம் பள்ளிக்கூடத்திற்குச் சிபார்சு செய்தார். சென்ற ஞாயிறு தாலுகா போர்டுத் தலைவரைக் கண்டேன். அவர், "ஐயா, அந்த நாற்காலியைக் கொண்டுவாரும்; இந்தப் பழத்தை நறுக்கும்; இதை எழுதும்" என்று என்னை வேலைவாங்கி' பள்ளிப் பரிசோதகருக்கு ஒரு கடிதம் தந்தார். அந்த மகானுபாவர் என்னுடன் அந்தரங்கமாகப் பேசி, "இந்த வேலைக்கு 100 மனுக்கள் வந்திருக்கின்றன. உமக்கு வேலை வேண்டுமானால்..." என்று கையைச் சுண்டிக் காட்டினார். 'ஐயா, கைக்கூலி கொடுத்துக் கூலிவேலை செய்ய நான் விரும்பவில்லை; வந்தனம் என்று வந்துவிட்டேன். நான் மைக்கேலைப் பார்த்து, 'ஐயா, இப்படி என்றேன். "ஆம் ஐயா, உமது சுதந்திரத்திற்கும் போர்டு பள்ளிக்கூடத்திற்கும் ஒத்துவராது; எங்கள் மிஷன் ஸ்கூலிலேயே வேலைவாங்கி வைக்கிறேன், இருமே!" என்றார். 'வேறு வேலை கிடைக்காவிட்டால் பார்ப்போம், நன்றி என்று விடை பெற்றேன்,

நண்பா, பாதிரிகள்போல் நான் ஒரு கிராமத்தில் தங்கி ஏழை யெளியவர்களுக்கு கல்வித் தொண்டு செய்யப் போகிறேன். சட்டை தலைப்பாகை வைத்து ஆளை மிரட்டும் உத்தியோகத்தைவிட, ஏழைகளுக்கு அறிவுப் பணி செய்வதே எனக்குத் தர்மார்த்தமாகத் தோன்றுகிறது: (1) என் வாழ்க்கை யாருக்கும் அடிமையாகக் கூடாது; (2) நான் பணத்திற்காக வாழாமல் அறத்திற்கே வாழவேண்டும்; (3) எனது தேவைக்குப் போதுமட்டும் சேர்த்து வைத்துக்கொண்டு பொதுநலத்திற்குக் கிளம்பவேண்டும்; (4) மாணவருக்கு நான் உண்மையாக சகோதரனாயிருந்து பயனுள்ள கல்வி புகட்ட வேண்டும்; (5) ஐந்துமணி நேரம் கல்வித் தொண்டு போக மீதி நேரம் எனது அறிவை வளர்த்து யோகசாதனத்தையும் கவனிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சௌகரியங்கள் உள்ள இடத்தை நான் எதிர்பார்க்கிறேன், நல்ல நதிதீரத்தில் மகான்கள் இருக்கும் சிற்றூர்களில் சொற்ப சம்பளமானாலும் வேலைபார்க்க போவேன். சாது சங்கமும் சத்திய வாழ்வுமே எனக்குத் தேவை. உனக்கு அப்படி ஏதாவது இடம் தெரிந்தால் எழுது. நான் சிலகாலம் மதுரை திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றிக் குற்றாலத்தில் நீராடி மாதக் கடைசியில் மதுரையில் சிவதரிசனம் செய்ய வருவேன்; அப்போது உன்னைக் காண்பேன். நண்பா, உனக்கு என் அன்பு ஆருக. அன்பு சுத்தானந்தன்.

## இணுவில் கந்தசுவாமி கோவில்.

எட்டிகுடி வேலவர் ஏசல்

ஆசிரியர், பண்டிதர் இ. திருநாவுக்கரசு அவர்கள்

சென்ற தைமாசச் சுடரில் இணுவில் கந்தசுவாமி கோயில் படமும் அதன் வரலாறும் வெளியிடப்பட்டதை நேயர்கள் அறிவார்கள். இணுவை முருகன்மீது தீராக் காதல் கொண்ட ஆசிரியர் அவர்கள் கந்தபுராணக் கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கி மேற்குறித்த நூலை ஆக்கி உள்ளார்கள். அவர்களது இந்த கந்தன் முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

# ஆரோக்கியத்திற்குரிய அரிய நியதிகள்

(சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள்)

நாம் நம்மை நாகரிக மக்கள் எனப் புகழ்ந்து கொண்டாலும், உணவு விஷயத்தில் நாம் பற்பல படுமோசமான தவறுகளைச் செய்து வருகிறோம்.

ஆங்கில முறையில் உட்கொள்ளப்படும் சிற்றுண்டியும், சாப்பாடும் நம் நாட்டின் சீதோஷ்ண நிலைக்குகந்தனவாக இல்லை.

சமைக்கப்பட்ட இறுகிய உணவு வகைகளைப் பற்பல கறிவகைகள், வாசனைப் பொருள்களுடன் உண்டு, தம் வயிற்றை இயற்கைக்குப் புறம்பான உணவினால் நிறப்புகிறோம். இதனால் தான் இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள இளைஞர்களின் உடல் நலத்தில் இந்தச் சீரலிவு தோன்றி நிற்கிறது.

தொன்று தொட்டுள்ள சுபாவங்களைத் திடீரென நம்மால் நிறுத்திவிட முடியாது. எனவே நாம் ஒரு உடன்பாட்டிற்கு வந்தாக வேண்டும்.

முதலாவதாக, காலை நடை அல்லது வயிற்றிற்குரிய அப்பியாசங்கள் அல்லது சூரிய நமஸ்காரம் அல்லது பஸ்சிமோத்தாசனம், சர்வாங்காசனம் என்ற இரு ஆசனங்களையாவது நாம் செய்ய வேண்டும்.

இரண்டாவது வெந்நீர் அல்லது தண்ணீரில் காலையில் ஸ்நானம் செய்ய வேண்டும்.

மூன்றாவதாக ஸ்நானத்திற்குப் பிறகு சிற்றுண்டிகள் அருந்தக் கூடாது. ஒரு "கப்" பால், எலுமிச்சரசம், ஆரஞ்சு அல்லது தக்காளி ரசத்தை ஒரு "கப்" வெந்நீர் அல்லது தண்ணீரில் சாப்பிட வேண்டும். பாலுக்குப் பதிலாக மோரையும் உட்கொள்ளலாம். ஒன்றும் கிடைக்கவில்லை என்றால் ஒரு "கப்" வெந்நீர் அல்லது தண்ணீர் போதுமானது.

நான்காவது நமது பதிவான காலை உணவை நாம் புறக்கணிக்கக் கூடாது. ஆனால் எண்ணெயில் வறுக்கப்பட்ட பதார்த்தங்கள், இனிப்புப் பண்டங்களைக் கூடுமான வரையிலும் விலக்க வேண்டும்.

ஐந்தாவதாக மாலையில் "டீ" அல்லது "காப்பி" க்குப்பதிலாக அந்தந்தக்காலத்தில் இடைக்கும் பழங்களுள் ஓரிரண்டை உட்கொள்ளவும்.

ஆறுவதாக, நமது இரவு உணவு, பழங்கள், காய்கறிகள் பால் இவைகளையே முக்கியமாகக் கொண்டு அமையவேண்டும்.

ஏழாவதாக, இரவு போஜனத்தை ஏழு அல்லது எட்டு மணிக்குள்ளாக முடித்துவிட வேண்டும்.

எட்டாவதாக நாம் இரவில் 10 இல் இருந்து 11 க்குள் படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

ஒன்பதாவதாக, வாரம் ஒருமுறையாவது பால், காய்கறிகள் அடங்கிய சாப்பாட்டை இருவேளையாவது நாம் உட்கொள்ள வேண்டும்.

பத்தாவதாக, நம்மைக் கீழ் நிலைக்குத் தள்ளும் எண்ணங்களை நாம் மனத்தில் கொள்ளக்கூடாது. கடவுள் எப்பொழுதும் நல்லவர். நமது வாழ்வில் நாம் எதிரிட வேண்டிய கஷ்டங்கள் எல்லாம் நமது முன்னேற்றத்திற்குரியன. அவற்றை வென்று, தாண்டிச்செல்வதற்குரிய வழிவகைகளையும் வலுவையும் தர ஆண்டவனிடம் நாம் பிரார்த்தனை செய்யவேண்டும். படுக்கைக்குச் செல்லும் முன்னர் இஷ்ட தெய்வத்தின் உருவத்தை மனக்கண்முன் நிறுத்தி, ஆரோக்கியம், செல்வம், வாழ்க்கைப் போராட்டத்தில் எதிரிடுவதக்குரிய சக்தி மூன்றையும் தந்தருள் இறைவனிடம் பிரார்த்தனை செய்யவேண்டும்.

பலநாட்களுக்கொருமுறை விருந்துச் சாப்பாடு அவசியமென்பதைப் போல், இயற்கையோடொத்த வாழ்விற்கு எதிரான நம் தவறுகளைத் திருத்தும் முறையில் உபவாசங்களையும் நாம் பலநாட்களுக்கொருமுறை மேற்கொள்வது அவசியமாகும். அபூர்வமாக இனிமா அல்லது விளக்கெண்ணெய் அல்லது ஏதாவது பேதிமருந்தை உட்கொண்டு மலச்சிக்கலை அகற்றிக் குடலைச் சுத்தம் செய்ய வேண்டும்.

கடைசியாக, நாம் நமது சாதாரண நவதானியச் சாப்பாட்டை உட்கொள்ளத் தொடங்கும் போது, கீழ்வரும் நியதிகளைக் கூடுமான வரையிலும் அனுஷ்டிக்க முற்படவேண்டும். ஜீரணத்திற்குத் தேவையான கடுநிலைப்பொருளொன்று வேண்டுவதால் ஸ்டார்ச்சுகள், கொழுப்புகள், பச்சைக்காய்கறிகள், சர்க்கரை முதலியனவைகளைச் சேர்த்துச்சாப்பிடலாம்.

ஸ்டார்ச்சுகள், கொழுப்புகள், பச்சைக்காய்கறிகள், புளிப்புமிகும் பழங்கள் முதலியவைகளைச் சேர்த்து உண்ணலாம்.

காலையில் பழங்களைப் புசிப்பது ஒரு உயர் நியதியாகும் சாயங்காலத்திலும் பழங்களை உட்கொள்வது சிறந்ததே. பழங்களைத் தனியாகவும் புசிக்கலாம்.

நமது உணவுக்கு ருசியளிக்கும் முறையில் சிறிது எலுமிச்சம் பழரசத்தைச்சேர்த்துக் கொள்ளலாம் சாப்பாட்டிற்குப் பிறகு அல்லது ஓரிரண்டு மணிநேரம் கழிந்த பின் மோர் அருந்துவது நல்லது.

இந்த நியதிகள் அனைத்தும் ஜீரணம் நல்ல முறையில் இல்லாத நபர்களுக்கே உரியன. ஏன்? அத்தகையவர்களின் தொகைதானே அதிகம். உயரிய ஆரோக்கியமுடைய ஒரு சிலரால் தான் எந்த உணவையும் ஜீரணிக்கச் செய்யவும், எத்தகைய உணவுக் கோளாறையும் தமது கடும் உழைப்பால் சமாளிக்கவும் முடியும்.

சரீர அனாரோக்கியம், பலக்குறைவு நரம்புத் தளர்ச்சி என்பவற்றைக் காரணமாகக் கொண்டு ஒழுக்கச் சிதைவுகள் ஆத்மீக அறியாமை முதலிய களைகள் வெகு விரைவாக வளர்கின்றன. உயரிய ஆரோக்கியத்தைக் கொண்டு விளங்குவது உள்ளுள்ள ஒழுக்க, ஆத்மீக வலுவை வளர்ப்பதற்குரிய தயாரிப்பாகும்.

# நித்திலச்சுடர்

(செல்வி, கோ.தி. சுப்பையா,)

பாற்கடலில் வசிக்கும் மீனனது அப்பாலே அருந்தாது சிறுச்சிறு பூச்சிகளைக் கண்ணுற்று அதில் ஆசை கொண்டு அவைகளை அருந்த வேகமாக விரைவதுபோல, உறியின் மேல் அமர்ந்திருக்கும் பூனை அதிலிருக்கும் பாலைக்குடிக்காது எங்கோ ஓடுகின்ற ஒரு சிறிய கரப்பான் பூச்சியைத் தின்ன ஓடுவது போல, இவ்வுலகில் வாழும் மக்கள் தம்மைச் சூழ்ந்திருக்கும் திருவருளை அறியாது சிற்றின்பங்களே வாழ்க்கைக் குறிக்கோள் என எண்ணி மயங்குகின்றனர். அப்படிப்பட்ட மக்களை காப்பாற்றிக் கரை சேர்க்கவெண்ணியே அனுபமிகு சித்தர்கள் பலர் பல அரும் பெரும் நூல்களை இயற்றினர், அப்படி அவ்வெண்ணத்தோடு இயற்றப்பட்ட நூல்களிட் திருமந்திரம் முக்கிய இடம் வகிக்கின்றது. இவ் அரிய, பெரிய, அற நூலை இயற்றியவர் திருமூலர்.

திருமந்திரம் அருளிய திருமூலர் திருக்கைலாயத்தில் இருந்த சிவநாத சித்தருள் ஒருவர் கி. பி. 100 - க்குப் பின் 900- க்கு முன்னும் இவர் காலம். திருநந்தி தேவரின் சீலமிகு மாணாக்கராம் இவர் "சந்தனப் பொதிய செந்தமிழ் முனிவனும்" அகத்தியரின் அருமை நண்பர்.

சேஷ்டை மிகுந்த குரங்கொன்றுக்கு பித்தம் தலைக்கேறியிருக்கும் சமையத்தில், அது கள் வெறிக்கு ஆளாகி அந்நேரத்திலே விஷம் மிகுந்த தேளொன்று அதனைக் கடிக்கப் பெற்றதைப்போன்றது நம் மனம். அந்த மனத்தை அடக்கி வென்றூர் திருமூலர். அதன் சக்தியால் திருநடனம் கண்டார். சதாசிவத் தத்துவமுணர்ந்து அதில் லயித்து சத்திநிபாதகம் விளங்கப்

பெற்ருர். உலக முதல்வன் சிவனைப் பூசித்து அவரையே மிஞ்சிவிட்டார் தம் காரியத்தில். ஆம் அவர் பிறப்பிறப்பற்றவர் அறிவு மலர்ப் பெற்று அதன் சக்தியால் அண்டத்தரசனை இரண்டறக் கலந்தார்.

திருமூலர் ஒருநாள் தன் நண்பரைக் காணப் பொதிய மலைக்கு வழியேற்றி, வழியில் கண்ணளித்த கண்ணப்பனின் காளத்திநாதனைத் தரிசித்தார். கங்கை, காவிரியாம் புனல் களாடி அதன் கரையடுத்த சாத்தனூர் என்னும் சிற்றூரை அடைந்தார். அவ்வூரிலே மூலன் என்னும் இடையன் மாடு மேய்த்துவருநாளிலே விதி வசத்தால் இறந்தான். தன் அன்னையை இழந்த மகவை போலக் கதறின கோவினம். "அம்மா' என்று அரற்றின ஆனினம். கண்ணீருற்று ஆறு கியது. இதைக்கண்ணுற்ருர் அவ்வழியே வந்த நம் முனிவர், அஷ்ட சித்தியாம் அணிமா, மகிமா, லகிமா. கரிமா, பிராப்தி; பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் முதலியன கைவரப்பெற்றவர். ஒருடலிலிருந்து இன்னொரு உடலுக்குத் தம்முயிரை மாற்ற வல்லவர். உடனே, முனிவர் தம்உடலை ஓரிடத்தில் காப்பாற்றி வைத்தார். பிணமாகக் கிடந்த மூலன் உடலிற் புகுந்து அவனுருவில் உயிர்த்தெழுந்தார். பிறவிக்குருடன் கண்பார்வைப்பெற்றது போல் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்தது பசுநிரை இப்போது ஆனந்தக்கண்ணீர் ஊற்றின. வீடு நோக்கின மந்தைகள். மாலைக்கடன் முடித்த மூலர் அவற்றின் பின்னே சென்று அவைத் தத்தம் மனை சேரக்கண்டு உவகையுற்று எவ்வீட்டிலும் நுழையாமல் வெளியே நின்ருர். அதனைக்கண்ட மூலன் மனைவி அவரை அணுகி, "ஏனிப்படி நிற்கிறீர், வாரும் உள்ளே" என்று தொட்டு அழைக்க எகிறுள். அவள் செய்கை அறிந்த முனிவர் "தொடாதே!" என்றுவிலகிஞர். அவர்தனது நாயகன் என்று எண்ணிய பேதை திகைத்தாள். "எனக்கும் உனக்கும் ஓர் உறவுமில்லை" என்று எதிர்த்துரைத்து ஒரு பொதுமடத்துட் புகுந்து சிவத்தியானத்தில் ஆழ்ந்தார். திகைப் புற்று அறிவிழந்தாள் பேதை. உற்றாரையும் உறவினரையும் கூட்டி ஒப்பாரியே தொடங்கிவிட்டாள். தன் கணவனுக்குப் பித்துப் பிடித்து விட்டதென்று பிதற்றிஞள்,

அறிவாளர் முனிவரின் உண்மைநிலை அறிந்தனர். அவளைத் தேற்றினர். "இவர் பித்தரல்லர்; சித்தர். உலகப் பற்றறுத்தவர். இவர் உன்மேல் இனிப் பற்றுற மாட்டார். ஆகலால் இவர் நிஷ்டையைக் கலைக்காது இவ்விடம் விட்டு அகன்றுவிடு' என்று அவளுக்குரைத்தனர். அவளும் போய்விட்டாள்.

முனிவர் தம் முன்னுடலைத் தேடினர். அது கிடைக்காமற் போகவே மூலனுடலிலேயேதங்கித் திருமூலராகவே விளங்கினர்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே"

என்பது அவர் கருத்து. உலகிற்குச் சிவாகமப் பொருளைத் தமிழில் அருளவேண்டுமென்பது சிவன் சித்தமாயிருந்ததனால்தான் தன் இயலுடலை மறைத்தார் இறைவர் என்றெண்ணினர். அவர் திருவாவடுதுறைக்கு வந்து ஓர் அரசமரத்தடியில் மாதவம் புரிந்து சக்திக் கனல் ஒளிரப்பெற்றார். தனக்கு எது ஏற்பட்டாலும் அது தன் குருவினுற்றான் என்பது இவரது அசைக்க முடியாத நம்பிக்கை. சித்திகள் வாய்க்க உதவிய குருவிற்கு நன்றி செலுத்துகிறார் பாருங்கள்.

"நந்தி அருளாலே மூலனை நாடிப் பின்
நந்தி அருளாலே சதாசிவனுயினேன்;
நந்தி அருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நானிருந்தேனே"

அவர் மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாத நிலைகளைக் கடந்தவர்.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்ற பற்றத் தலைப் படுந்தானே"

என்கிறார் திருமூலர். தான் பெற்ற சிவானந்த இன்பத்தை மற்றவர்களெல்லோரும் அடைய வேண்டுமென்ற பரந்த நோக்கம் உடையவர். எல்லையற்ற பரம் பொருளை அடைய நமக்கு

வழி சொல்லித் தருகிறார். ஊனுடலினாலே சரியை, கிரியை யோக சாதனங்களால் நாம் சத்திநிபாதத்தைப்பெறவேண்டும். அவ்வுணர்வு நம்முள் எழுந்து நம்மை ஆட் கொண்டதுமே ஓங்கார மந்திரம் நம்முள் உதிக்கும். அப்படி உதித்த மந் திரத்தை நாம், நம்மிலிருந்து அது வழுவவிடாத படி இறுக்கி பற்ற வேண்டும். அப்படிப் பற்றிநேமானால் நம் மனம் பரிபக் குவ நிலையடையும். அப்பொழுது அந்த அறிவு மயமான சிவம் அன்பனை ஆட்கொள்ளும், வழிசொல்லித் தந்துவிட்டார். இனி அதைப்பின்பற்றி நடப்பதுதான் நம்தொழில். இதோ அவ ரின் மூலமந்திரம்:

"அப்பனை நந்தியை ஆராவமுதனை
ஒப்பிலி வள்ளலை ஊழிமுதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசீசன் அருள் பெறலாமே.

தந்தையாகிய சிவனை, தம்குருவாகிய திருநந்திதேவரை, திகைப்பூட்டாத அமுதனாகிய எம்பிரானை. ஒப்பற்ற வள்ளற் றன்மையுடன் வரையாது வழங்கும் வள்ளலை, இவ் ஊழிக் கெல்லாம்முதல்வனானதேவனை எதன் மூலமாவதுபோற்றுங்கள். போற்றி வழிபடுங்கள். அப்படி வழிபட்டால், இரப்போர்க்கு இல்லை என்னாது வழங்கும் ஈகையாளன் நாம் உன்னும் பொ ருளை நமக்கு அளிக்க ஒருபோதும் தயங்கமாட்டார்.

நாம் எங்கு நின்றாலும் நம்மை, "வா, என் திருவடி சேர்!" என்று வழிகாட்டி, இடரின்றி புகலிடமாகிய அவன் மலரடிக்கு நம்மை அழைத்துச் செல்வான்" என்கிறார் திரு மூலர். தனக்குமேல் ஒருவன் இல்லாமல்தானே எல்லோர்க்கும் முதல்வனாய் விளங்கி, தன்னை அண்டினோர்க்கு பேரன்போடு அடைக்கலம் அளிப்பவன் அந்த ஒப்பற்ற தந்தை.

இவ்வளவையும் கூறிய திருமூலர் ஈசனியல்பை விளக்கு கிறார். ஒரு நான்கு வரியிலே, இவ் வண்டசரா சரங்களையும் காக்கும் காவலனை, விளக்கிவிட்டார். அதையும் பார்ப்போம்.

''தீயினும் வெய்யன், புனலினுந் தண்ணியன்,
ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை,
சேயினும் நல்லன்; அணியன் நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடையோனே''

சுருங்கக் கூறி விரிய விளக்கி விட்டார். பாபங்களை எரிப்பதில் வெம்மையான தீயினும் பார்க்க வெய்யன், ஆனல் அன்பர்களை ஆட்கொள்வதிலோ தண்ணீரிலும் பார்க்க தண்மையானவன். குழந்தையானது. ஒருமுறை நாம் அதைக் கண்டித்துத் தண்டித்தபோதும் அடுத்த நிமிடம் அதை மறந்து நம்மோடு கொஞ்சி விளையாடுகிறது. குரோதத்தை மேன்மேலும் வளர்த்துக்கொண்டு வாழ்நாள் முழுதும் கண்டித்தவருடன் பகைக்க வேண்டும் என்ற வஞ்ச புத்தி குழந்தைகளிடம் கிடையாது. கள்ளங்கபடமற்ற மனத்தது மதலை. வஞ்சித்தவரை கிஞ்சித்தேனும் அஞ்சிட வைக்க எண்ணுது குழவி. அதே போலத்தான் நம் முதல்வனும் குழந்தையைவிட நல்லவன். நல்ல அன்பருக்கு மிக அருகில் இருந்து துணை செய்வான். அது மட்டுமா? அத்தாழ்சடையோன் தாயினும் நல்லவன். ஆச்சரியம்! அவனே தாயைப்போலவும் சேயைப்போலவும் விளங்குகின்ருன். இத்தனை அருங்குணங்கள் படைத்த அவன் பெருமையை யாரும் அறிவார்களில்லையே! இதோ இன்னெரு சுடர்;

'' திருவடியே சிவமாவது தேரில்;
திருவடியே சிவலோகஞ் சிந்திக்கில்;
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே.''

சீவனை ஆட்கொள்ளும் பொருட்டு இறைவன் உளந்தொறும் திருவடி நடனம் புரிகின்ருன். அத்திருவடியே சிவலோகமாகும். ஆன்மா சிவத்தின் பாற் செல்வதும் திருவடிப்பற்றேயாம். உள்ளாழ்ந்து கடவுளைத் தெளிபவர்க்கு அவர் திருவடியே தஞ்சமாகும்.

சைவசமயமாம் ஆழியிலே, திருமூலராம் முத்துக்குளிப்பவர், ஆழ்ந்து எடுத்த நித்திலங்கள் இவை. இந்த நித்திலங்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்த்தால் அந்த நித்திலச்சுடர்கள் நம்முள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

பத்தாந்திருமுறையுள் அடங்கும் இத்திருமந்திரத்தை அரசடியில் நீண்ட மாதவம் செய்யும்போது திருமூலர் இயற்றினர்.

''மூலன் செய்த மூவாயிரந் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது;
காலை எழுந்து கருத் தறிந்தோதிடின்
ஞாலத்தலைவனை நண்ணுவரன்றே''

## நீதி வாக்கியங்கள்

தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும், வருவிக்கும்.

நன்மை செய்வதற்குச் சமயம் வாய்க்கும்பொழுது செய்யா தொழுகுவையாகில், பின் ஒரு காலத்தில் வாய்ப்பது அரிது.

சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம். தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரமன்றி பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப்படுகின்றவர்களே உத்தமர்.

எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும், முற்றறிவு உடைய கடவுள் அறிந்து, பலன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியாதென்!

தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்; அவ்வற்ப இன்பமுமோ மிக இழிந்தது.

அறிவும் அதனல் ஆகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனாய் இரு.

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

நாவலர்.

# திருமுறைக்காட்சி (34)

(முத்து)

## புனிதவாய் மலர்ந்தழுத சம்பந்தர்

அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது பழமொழி. வீடு தோறும் நிகழும் நிகழ்ச்சி இது. சம்பந்தக் குழந்தை ஒரு நாள் உடல் தந்தையைக் காணுது வாய்விட்டழுதது. உயிர்த் தந்தை ஓடோடியும் வந்து பால் ஊட்டினூர். சாதாரணபால் அன்று; ஞானப் பால். ஞானப்பாலைக் குடித்தமையினூல் ஞானசம்பந்தர் ஆனூர்.

சாதாரண குழந்தைகள் அழுதால் உடலுக்கு வேண்டிய பால் கிடைக்கும் அத்துடன் அவர்கள் அழுகையும் நின்றுவிடும்; அழுகைப் பயனும் முற்றுப் பெற்றுவிடும். சம்பந்தக் குழந்தை அழுதபடியினுல் வேத நெறி தழைத்தோங்கியது மிகு சைவத்துறை விளங்கியது; பூத பரம்பரை பொலிந்தது.

இந்து சமயம் மிக மிகப் பழமையானது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகக் கூறப்படும் அர்ச்சுனன் சைவ சமயத்தவனுக விளங்கினுன். அர்ச்சுனனுக்கு முன்பு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இராமரும் சிவலிங்க வழிபாடாற்றியதாகச் சான்றுகள் உள்ளன. இந்து சமயத்தின் தத்துவஞானம் மிக ஆழ்ந்தது. இந்து மதத்திற்கு

முதல் நூல் நான்கு வேதங்கள் அடங்கிய சுருதிகளாம். செவி வழியாகவே கேட்டு வேதங்கள் கூறப்பட்டு வந்ததால் சுருதி, என்றும், ஏட்டில் எழுதப்படாமையால் எழுதாக் கிளவி என்றும், பிறர் செய்யாமல் இறைவனால் செய்யப்பட்டமையால் செய்யா மறை என்றும் பெயர்கள் உண்டு. நான்கு வேதங்களுக்கும் தொகுப்பான பெயர் வேதம் என்பது. வேதம் என்பதற்கு முற்றறிவு அல்லது பரிபூரண ஞானம் என்று பொருள்.

வேதம் வித் என்னுந் தாது வினடியாகப் பிறந்தது. வித்-அறிவு. வேதம்-சிவத்தை உணர்தற்குரிய அறிவுக்கருவி. வேதநெறி-வைதிகம். அதாவது அறிவு நெறி. நெறி-வழி. வேதம் வழிபோன்றது. வழிக்குத்துறை இருத்தல் இயல்பு. துறை சைவம், வேத நெறியுஞ் சைவத்துறையுஞ் சேர்ந்த ஒன்று வைதிக சைவம் என்பது. "இராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம்" என்றார் தாயுமானாரும்.

வேத நெறி தழைத்தோங்கினால் தான் மிகு சைவத் துறை விளங்கும். சிவத்தை அடையும் நிலை எதுவோ? அது சைவத்துறையாகும். கடல் பரந்திருப்பினும் துறை இல்லா விட்டால் மக்களுக்குக் கடலினால் பயன் இல்லாதொழிகின்றது. அஃதே போல் வேதநெறி பரந்தது; கடல் போன்றது. வேத வியாசரால் சில்வாழ்நாட் பல் பிணிச் சிற்றறிவினோருக்கு ஏற்றவகையில் வகுக்கப் பெற்றது. அத்தகைய வேதநெறி பயன்படவேண்டுமானால் சைவத்துறை மூலமே பயன்படவேண்டும். சிவபுரம் போய்ச் சேர்வதற்குப் பயன் படுந்துறை சைவத் துறையாகும்.

சம்பந்தக் குழந்தை திருவாய் மலர்ந்து அழுதமையினால் ஞானப்பால் ஊட்டப் பெற்றது. அவ் விசேடத்தினால் முதல் மூன்று திருமுறைகள் மக்களுக்குக் கிடைத்தன. திருமுறை அத்தனையும் சைவத்துறையில் மக்களைக் கொண்டு சென்று சேர்த்தன. திருநல்லூர்ப் பெருமணத்தில் திருமணத்திற்குச் சென்ற அத்தனைபேருக்கும் சோதியிற் கலக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சைவத்துறையின் விளக்கத்திற்கு இந்த ஒரு சாட்சியே போதுமானது. சைவத்துறை சென்று ஏறினர் அனைவரும் சிவபுரம் சென்றடைதல் திண்ணமாகும்.

# மும்மணிகள்

கரணவாய் செவ்வந்திநாத தேசிகர்பாடிய
மாவை, மும்மணி மாலையிலிருந்து

1. அருந்தவர்வாழ் மாவை யமர்ந்துறையுஞ் செவ்வேள்
திருந்தடிகள் நாளும் தெளிவோர் — பெரும்புடவி
துன்பந்தரும்பிறவி நோயார் அவனருள் தோய்ந்து
இன்பம் பெறுவார் இனிது

2. இசைகொண்ட வானவ ரேத்திடு மீச! இகலவுணர்
நசை கொண்ட நின்சுடர் வேலவ! நித்திலந் தாங்கிஎறி
விசைகொண்ட தெண்டிரை யார்கலிமாவை விமல! நின்பால்
நசைகொண்ட யான்துயர் நீங்கநின்னருள் நல்குதியே

3. நல்லிசைப் புலவரு நவிலுதற் கரிய
பல்புகழ் நிறுத்த நின் பதவிணை நறுமலர்
கல்லாச் சிறியேன் கழறும் பொருளிலாப்
பொல்லா மொழியும் பொறுக்குமோ அன்றே
மைந்தர்தம் மழலை தந்தைக்குவத்தல் கண்(டு)
அடியேன் மொழிநிற் (கு) அவ்வாறுமெனும்
கருத்தால் நின்பாற் கவி சில வுரைத்தனன்
அவை யுவந் தெனக்(கு) ஈண்டருள் செய்குவையே
ஆழ்கடற் றமரமும் ஆசினிக் கனித்திரள்
வீழ்பெரும் சும்மையும் வியன்மதி அடியவர்
ஓதும் பாடலின் ஒலியும் பூசுரர்
ஓதும் பன்மறை ஓதையும் என்றும்
நந்தா மாவை நகர்க்கிறைவோனே.

## சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்

## பாடிய

## மாவை இரட்டைமணிமாலையிலிருந்து

## சிலபாக்கள்

கலித்துறை

கடையேன் பிறவிப் பெருந்துயர் நீங்கிக் கதி அடையத்
தடையேது மின்றி வரந்தரல் வேண்டுஞ் சராசரங்கள்
அடையவே புரக்கும் அருட்கடலே! அடலா ரயிலோய்!
விடையேறி மைந்த! திருமாவை மேவிடுர் வித்தகனே!

வெண்பா

வித்தகராய் வாழ்ந்தாலென்? மேதினியை ஓர் குடைக்கீழ்
வைத்தவராய் வாழ்ந்தாலென்? மாதேவா — சத்தியுறுஞ்
செங்கையாய்! மாவைத்திரு நகராய்! என்னுதார்
தங்கள் வினை நீங்கிடுமோ தான்.

கலித்துறை

தானே தனக்கு நிகராக வைசிய சண்முகனைக்
கானுர் பொழிலெழின் மாவையந் தேவைக் கருத்துள் வைமின்
ஊனு ருடர்பு நிலையன்று செல்வர் உறுதியன்று
மானுர் கலவிச் சுகமு நிலையன்று மானுடரே!

வெண்பா

மானுடஞ் சேர் நற்பிறவி மற்றுண்டு வாயுண்டு
தூ நறு நீர் பூவுண்டு தோத்திர மூண் (டு)- ஆனவொரு
வித்தகஞ் சேர் மாவைநகர் வேளுண்டு கூற்றுவனுல்
எய்த்திடுவீர் நும்மதறி வென்?

கலித்துறை

என்னே வளஞ்செறி மாவையில் தேவனை யான்வணங்க
முன்னே புரிந்த பெருந்தவம் வேதமுதல்வனவன்
மின்னே ரிடைவள்ளி காந்த னவன் கிரி வேந்தனவன்
அன்னே எனத் துதித் தன்புசெய்வாருக் கருள்செயுமே.

# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச்சங்க வெள்ளிவிழா

## நாமலிகித ஜெபம்

யூன் மாதத்தில் கிடைத்த நாமத் தொகை பின்வருமாறு.

| | |
|---|---|
| மே மாதக் கணக்கின்படி | 656667 |
| கொட்டகலை மண்வெட்டித் தோட்டம் | 60600 |
| உருத்திரபுரம் | 9800 |
| இரத்தினபுரி-லான்ஸ்டன் தோட்டம் | 87757 |
| யாழ்ப்பாணம் | 25408 |
| கண்டி | 11518 |
| மாத்தளை | 6447 |
| குருநாகல் | 4200 |
| கலபொட | 7439 |
| கொழும்பு | 34256 |
| திரிகோணமலை | 871136 |
| கொத்மலி-நடியன்லேனை தோட்டம் | 32356 |
| கொத்மலி-வெஸ்ரோல் | 81964 |
| கினிகத்தனை-அல்லிகோட்டம் | 32987 |
| காரைநகர்-தருகுல இல்லம் | 31440 |
| உடுவில் | 10000 |
| காங்கேசன்துறை | 15100 |
| நாவலப்பிட்டி | 1049430 |
| றத்கோட்டை | 120334 |
| மொத்தம் | 3148837 |

சென்றமாதத்திலும் பார்க்க இம்மாதத்தில் பலர் நாமம் எழுதுவதில் ஆர்வங்காட்டியுள்ளனர் எல்லாருஞ் சேர்ந்து மாதந் தோறும் ஒருகோடி நாமமாவது எழுதினால்தான் எமது இறுதி இலக்கு 1962ம் ஆண்டு மே மாதத்தில் 25 கோடி நாமத்தின் எல்லையை அடையலாம். இரண்டு மாதக் கணக்கின்படி இன்னும் ¼ கோடியாகவில்லை. எழுதுவோர் தொகையும் எழுதும் நாமத் தொகையும் இன்னும் நாலுமடங்காவது கூடினால்தான் எமது முயற்சி நிறைவேறும். ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்கு முன் நாமத் தொகைகளை அனுப்புக.

## வெள்ளிவிழா நிகழ்ச்சிகள்.

ஓகஸ்ட் மாதத்தில் கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறும்.

செப்ரெம்பர் மாதத்தில் குருநாக்கல் கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறும்.

Registered at the G P. O. as a News Paper M, L. 59-300


## சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும், சந்தா அனுப்பும் போதும் விலாசமாற்றம் செய்யும்போதும் தங்கள் சந்தா இலக்கங்களைத் தவருது குறிக்குமாறு வேண்டுகின்ருேம். விலாச மாற்றம் செய்வோர் புதிய பழைய விலாசங்கள் இரண்டையும் தெளிவாக அனுப்புக ஒரே பெயரில் பலர் இருக்கிருர்கள். அதனுல் பிழைகள் நேரவுங் கூடும் இன்னுமவரை சந்தா அனுப்பாதோர் உடன் அனுப்பி வைக்க வேண்டுகின்ருேம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

**R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ், சேலம் 2.**

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு
இவ்விடமும் அறியத்தருக

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி (சிலோன்)**

---

## சர்க்கரை நோய் சூரணம்

(DIABETES) என்னும் நீரழிவு. மதுமேகம் சர்க்கரை வியாதிக்கு மிகச் சிறந்த சூரணம்.

நீரில்வருகிற சர்க்கரையைப் போக்கி புளிப்புச்சத்தை குறைத்து கொழுப்பு ரஸனைகள் போவதைத் தடுத்து சப்ததாதுக்களின் தித்திப்பைக் குறைக்கும் அற்புத ஔடதம் யாவும் மூலிகையினல் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது,

---

தபால் செலவு உட்பட டின் ஒன்று 6 ரூ 75 ச

இலங்கையில் கிடைக்குமிடம்

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

இந்தியாவில் கிடைக்கும் இடம்:-

**சம்பு இண்டஸ்ரீஸ் சேலம் 2. (S.I.)**

மலாயாவில் கிடைக்குமிடம்:-

**மு. கணபதி அன் கம்பெனி**

66, பெல்பீல்ட் ஸ்ட்ரீட் ஈப்போ.


Printed & Published by Mr. N. Muthiah,
"Athmajothi" Nilayam, Nawalapitiya.
at RAJAH PRESS, Theatre Road, Nawalapitiya, (Ceylon.) 13-7-60